# தமிழ் மலையாள சிறுகதைகளில் இருத்தலியம்

முனைவர் பொ.கோகிலா
*செம்பட்டி*

**முன்னுரை**

சமூகத்தில் வாழும் ஒரு தனிமனிதனின் இருப்பினைப் பேசுவது இருப்பியல் அல்லது இருத்தலியல் வாதமாகும். இத்தத்துவத்திற்கு மனிதனின் இறந்தகாலமோ, வரவிருக்கும் காலமோ முக்கியமானதன்று. வாழ்வின் பிடியில் சிக்குண்ட மனிதன் தனது இருப்பிற்குத் தேவையானவற்றைக் கண்டு அதனைப் பற்றிக்கொள்ளும் சுதந்திர உணர்வே அவனது இருப்பாகும். இருத்தலியப் போக்கு நவீன இலக்கியங்களில் அதிகமாகப் பேசப்படுகின்றன. அவ்வகையில் சமுதாய நெருக்கடிக் காலங்களில் மக்களின் விருப்பத்தைப் புனையும் கதைகள் இத்தத்துவத்தினைப் பின்பற்றிப் படைக்கப்பட்டுள்ளன. தமிழ் மலையாள சிறுகதைகளில் காணலாகும் இருப்பியலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இருத்தலியல் - விளக்கம்**

Existentialism என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் “இருத்தலியல் தனிமனிதனை முக்கியத்துவப்படுத்துவது. பொதுவான இலக்கணங்களை உடைத்து எறிந்து அவரவர்களுக்கு ஏற்றார்போன்ற இலக்கணங்களை வழிவகைசெய்வது.”[1]செ.ரவிசங்கர் (புதுமை இலக்கியப் பெட்டகம்,ப,9) “மனித வாழ்க்கையின் அவலங்களான சாவு,வெறுமை, குற்றஉணர்வு, பீதி, வேதனை ஆகியன இருத்தலியல் தத்துவத்தில் முதன்மைப்படுத்திப் பேசப்பட்டுள்ளன என்கிறார்”[2] பா.ஆனந்தக்குமார் (இந்திய ஒப்பிலக்கியம்,ப,44) “சூழ்நிலைக்கேற்ப தனக்கேற்றதைத் தானே முடிவு செய்து கொள்வது”[3] என அரங்க சுப்பையா இருத்தலியலுக்கு விளக்கம் தருகிறார்.

**சிறுகதை**

இருத்தலியல் போக்கு நவீன இலக்கியங்களில் மிகுதியாக எடுத்தாளப்பட்டிருக்கின்றன. புனைகதையுலகில் க.நா.சு, இந்திராபார்த்தசாரதி, ஆதவன், அசோகமித்திரன் நாவல்களில் இருத்தலியல் தத்துவம் மிளிர்வதனைக் கானமுடிகிறது. நாவல்களைத் தொடர்ந்து தமிழ் மலையாளச் சிறுகதையாசிரியர்கள் க.நா.சுப்ரமணியன், பாமா, எஸ்.கே.பொற்றேகாட், பால் சக்காரியா போன்றோர் தம் கதைகளில் இருத்தலியல் போக்கினை வெளிப்படுத்தியுள்ளமையை அறியமுடிகிறது.

**அபத்தம்**

இருத்தலியத்தில் இது ஒரு முக்கியமான கருத்தமைப்பாகும். உணர்ச்சிப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் வாழ்க்கையின் அர்த்தமின்மையைத் தெரிந்துகொள்ளும் போது வெளிப்படுவது தான் அபத்தநிலை. காரணகாரியத் தொடர்பு எதுவுமின்றி அன்றாட வாழ்க்கையில் நம் கண் முன்னே நிகழும் சில நிகழ்ச்சிகள் அர்த்தமற்றவையாக இருக்கின்றன. இவற்றின் ஊடே ஓர் அர்த்தத்தைத் தன் பகுத்தறிவின் உதவி கொண்டு தேட விழைகிறான் மனிதன். இவனது பகுத்தறிவுக்கும் உலகின் அர்த்தமின்மைக்கும் இடையேயுள்ள முரண்பாடுதான் அபத்தம் என ஆல்பர்ட் காம்யூ குறிப்பிடுகிறார்.(பா.ஆனந்தக்குமார்,ப,45)

**மகாத்தியாகம்**

மகாத்தியாகம் என்னும் தமிழ்ச்சிறுகதையில் ராஜாமணி தன் சிறுவயதிலேயே தனது தாய் மற்றும் சகோதரியையும் இழந்து தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்து வருகிறான். வாலிப வயதில் மணமுடித்து தான் இழந்த இன்பங்களைத் திரும்ப பெறுவதாக எண்ணுகிறான் இந்நிலையில் அவனது மனைவியும் இரண்டு வருடங்களில் மரணித்து விடுகிறாள். இறுதியாக தனது தந்தையை நம்பி இருக்கின்ற வேளையில் ஒரு நாள் அவனது தந்தையும் மரணிக்கிறார். எவ்வித சுகத்தினையும் அனுபவிக்காது ராஜாமணி நிர்கதியில் வாடுவதாகக் கதையமைகிறது.

கதையில் மனித வாழ்க்கையின் அவலங்களான சாவு, வெறுமை,வேதனை ஆகிய மூன்று கூறுகளையும் இருத்தலியல் பார்வையில் படைக்கப்பட்டுள்ளமையை ராஜாமணியின் சிறுபருவத்தில் அவனது சகோதரிக்கு திருமணம் நடத்துகின்றனர். அவ்வாழ்க்கை அவளுக்கு உபயோகமற்றுப் போனதனை

‘‘பெண்ணுக்கு உரிய காலத்தில் உரிய படி கல்யாணம் செய்து வைத்தார் கிருஷ்ணசாமி சாஸ்திரிகள் ஆனால் அந்தப் பெண்ணின் அதிர்ஷ்டம் சரியாக இல்லை. மகா சுயநலக்காரர்களான அவளது கணவனும் கணவனின் தாயும் சேர்ந்து பெண்ணின் நடத்தை சரியில்லை என்று கதைகட்டிவிட்டு அவளைப் பிறந்த வீட்டிற்கே திருப்பியனுப்பி விட்டார்கள்.’’[4] (80) என்னும் வரிகளில் அப்பெண்ணின் அர்த்தமற்ற வாழ்க்கையை அபத்தமாகக் குறிப்பிடுகிறார்.

‘‘எப்போதும் பலவீனமாக இருந்த தாய் பெண் வீடு திரும்பிய இரண்டொரு வருடங்களுக்குள்ளாகவே மனமுடைந்து இறந்து விட்டாள்’’ ‘‘தாய் இறந்து நான்கு வருடங்களுக்குள்ளே சகோதரியும் இறந்துவிடுகிறாள்’’ (ப,80)

‘‘தாயின் மரணம் தொடர்ந்து சகோதரியின் மரணம்! என் செயலால் இனி ஆவது ஒன்றுமில்லை என்று இளம்பிராயத்திலே கற்றுக் கொண்டுவிட்டான் ராஜாமணி’’[5] (ப,81) என்னும் வரிகளில் இருவரின் இழப்பும் அவனுக்கு பெரும் தோல்வியாக அமைவதனை உறுதிப்படுத்துகிறார். ராஜாமணி இதிலிருந்து மீண்டு படித்து பணியில் அமர்ந்து அவ்வாழ்க்கை சற்று இன்பமாக மாறும் போதும் சகபணியாளர் செய்த தவறுக்காக இவனுக்குத் தண்டனை கிடைக்கப்பெறுகிறது. வாழ்வனைத்தும் வேதனைகளை அனுபவித்த ராஜாமணி வெறுமையை உணர்கிறான். மணவாழ்க்கை மூலமாவது இன்பம் கிடைக்கும் என்று மாற்றாக எண்ணிய அவனுக்கு அவனது மனைவியும் இரண்டு வருடங்களுக்குள் இறக்கவே அவனது மனநிலையை

‘‘அதற்குப் பிறகு அவன் தலைநிமிரவேயில்லை விதியுடன் போராடத்தனக்கு தெம்பில்லை என்று தீர்மானித்து விட்டான். வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிவிட முயன்றான்’’ கிழத்தகப்பனுக்காகத் தான் அவன் வாழ்க்கையுடன் ஒட்டிக் கொண்டிருந்தான் என்று கூடச் சொல்லலாம்’’[6] என்று அவனது இருப்பின் நிலையை (ப.84) ல் குறிப்பிடுகிறார். தனது மகனின் சுகபோக வாழ்விற்கு தான் இடையூறாக இருப்பதாக உணர்ந்து அவனது தந்தையும் இறுதியாக மரித்து விடும் போது ராஜாமணி நிர்கதியாக நிற்கும் போது தான் இந்தப் பிரபஞ்சத்தில் அர்த்தமில்லாத வாழ்க்கை ஏன் வாழவேண்டும் என்னும் முடிவுக்கு வருவதனை

‘‘முதலில் தாய் இருந்தாள் - கடைசியில் பிள்ளை இருந்தான் அவர்களுக்கென்றுத் தியாகம் செய்வது இவருக்குச் சாத்தியமாக இருந்தது, எனக்கு யார் இருக்கிறார்கள்? யாருக்கென்று நான் என்ன தியாகம் செய்வதற்காக உயிர்வாழ வேண்டும்?’’[7] (ப.86) என்னும் வரிகளில் அவனது வெறுமை கலந்த வேதனையின் எண்ணஅலைகளை

வெளிப்படுத்துகிறார். அடுக்கடுக்காக ஒரு மனிதனின் வாழ்வில் இறப்பும், வேதனையும் நிகழும் போது அவன் அதை எதிர்கொள்ள இயலாதவனாகவும், தனது வெறுமையான வாழ்வு அர்த்தமில்லாதது என முடிவெடுப்பவனாகவும் ராஜாமணி என்னும் பாத்திரத்தின் வாயிலாக இருத்தலியல் தத்துவத்தினை வெளிப்படுத்திச் சென்றுள்ளமை இதற்கு சான்றாக அமையப்பெற்றுள்ளது.

**ஒட்டகம்**

ஒட்டகம் என்னும் மலையாளச் சிறுகதையில் வரும் கதைத்தலைவன் ஒட்டகம் நெடுநாளாய் வேலைபார்த்து கிடைத்ததை வைத்துக் கொண்டு வரும் ஒட்டகத்திற்கு அவனது மானேஜர் மாது என்னும் பெண்ணை மணமுடித்து வைக்கிறான். ஒட்டகத்திற்கு சில மாதங்களிலேயே மணவாழ்க்கை வெறுத்துப் போகவே நிலைகுலைந்து போகிறான். இதற்கிடையில் மாது ஒரு குழந்தைக்கு தாயாகிறாள். ஒட்டகம் அது தன் குழந்தை இல்லை என்று புரியவே வாழ்வில் தனது முதலாளி தந்திரமாகத் தன்னை ஏமாற்றியதை எண்ணியும் தன் வாழ்க்கையைப் பறிகொடுத்த நிலையில் தன் உயிரை மாய்த்துக் கொள்வதாகக் கதையமைகிறது.

**‘ஒட்டகம்’** என்பவன் தனது வாழ்நாள் முழுவதும் தனது முதலாளிக்கு உழைக்கும் போது அவரின் உந்துதலினால் மணமுடிக்கிறான் திருமணத்திற்குப் பிறகு அவனுக்கு எவ்வித சடங்குகளும் நிகழாது பழைய சராசரி மனிதனாகவே காட்சிப்படுத்தப்படுகிறான் அந்நிலையில் அவனது வாழ்வின் அர்தத்தைப் புரிந்து கொள்ள வியலாதவனாக அவனிருப்பதனை,

“என்ன கிடைத்தது என்றோ என்ன பறிபோயிற்று என்றோ அறியாமல் அவன் வாழ்க்கை தொடர்ந்து கொண்டிருத்தல், வாழ்க்கையில் அவனுக்குப் புரிந்துகொள்ள முடியாத நிகழ்ச்சிகளில் இந்தக் கல்யாணமும் ஒன்றாக இருந்தது”[8] என்று ப.74 ல் குறிப்பிடுகிறார். மணமாகி தன் கணவனுடன் ஓர் இரவு கூட வாழாத அவனது மனைவி மாது ஆறு மாதத்தில் ஆண்குழந்தை பெறுகிறாள் அன்றிலிருந்து அவன் தன் வாழ்வின் வெறுமையை உணர்கிறான். அது தன் குழந்தை அல்ல எனத் தெரிந்தும் சுதந்திரமாகத் தன்னால் எந்த முடிவும் எடுக்க இயலாதவனாகவும், தனது ஏமாளித்தனத்தினையும் எண்ணி தன் உயிரை மாய்த்துக் கொள்வதனை, “அவர்கள் கதவை உடைத்து நீக்கி உள்ளே எட்டிப் பார்த்தனர். மேல் உத்திரத்திலிருந்து ஒட்டகம் பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தான்”[9] ப.78 ல் குறிப்பிடுகிறார். மனிதன் தான் எவ்வாறு இருக்கிறோம் என்பதைப் பற்றிய இருத்தல் உணர்வை தனது அன்றாட வாழ்க்கையில் உணர்வதில்லை. சாவை எதிர்கொள்ளுதல் போன்ற இக்கட்டான சூழல்களில் தான் அவன் தனது இருத்தலை உணர்ந்து கொள்கிறான்.(பா.ஆனந்தக்குமார், ப,44) வாழ்க்கை என்னும் போராட்டக்களத்தில் எதிர்நீச்சலிட்டு வெற்றிகாண இயலாதவனாகவும், அவனது குழம்பிய மனநிலையும், தனக்குவேண்டியவைகளைத் தானே சிந்தித்துப் பெற்றுக் கொள்ள இயலாத துணிவற்றவன் என்னும் இருத்தலில் ஒட்டகம் என்னும் பாத்திரத்தின் வாயிலாகக் கதையைமைத்துள்ளார்.

**தன்னை முன்னிறுத்தல்**

மனித வாழ்வில் பிறரைச் சாராது தன் இருப்பினை முன்னிறுத்தி வாழும் சுயச்சார்பு நிலையை வெளிப்படுத்தும் வகையில் பால் சக்காரியாவின் ‘அன்னம்மா டீச்சர் சில நினைவுக் குறிப்புகள்’ பாமா வின் ‘பொன்னுத்தாயி’ என்னும் கதைகள் அமையப்பெற்றுள்ளது.

**பொன்னுத்தாயி**

**பாமாவின் 'பொன்னுத்தாயி**' என்பவள் படிக்காதவளாகினும் துணிச்சல் மிகுந்தவள். நான்கு பிள்ளைகளைப் பெற்ற பிறகும் பொறுப்பில்லாமல் தனது வாழ்க்கைக்கு இன்னல் தரும் அவளது கணவனை புகார் கொடுத்துப் பிரிந்து விடுகிறாள். தான் பெற்ற குழந்தைகளையும் தனது கணவனோடே அனுப்பிவிடுகிறாள். ஊராரின் ஏச்சுக்களையும் மீறி யாரையும் சாராது தனக்கு தேவையானவைகளைத் தானே தீர்மானித்துக் கொண்டு கடை வியாபாரம் நடத்திப் பிழைத்து வருவதனை

"தாலிய மடில வச்சிக்கிட்டு கூடையை எடுத்துக்கிட்டு போயிட்டா பொன்னுத்தாயி, மறுநாளு காலையிலேயிருந்து ஊர்ச் சாவடிக்கு முன்னால ஒரு சின்னக் கடைபோட்டு யாவாரஞ் செஞ்சா, பத்து வருஷமா அவாக் கழுத்துல் கெடந்த தாலி கடபூராஞ் சாமாஞ்சட்டுக்களா நெறஞ்சு கிடந்துச்சு"[10] (ப.118) ல் குறிப்பிடுகிறார். பெண்கள் திருமணம் ஆகிவிட்டால் கணவன் நல்லவனோ, கெட்டவனோ அவனோடு அனுசரித்து வாழவேண்டும் என்று காலம் காலமாக இருந்து வரும் மரபுப் பார்வையைப் புறந்தள்ளிவிட்டு தனக்கானவாழ்வைத் தானே முடிவு செய்து சுயமாக வாழும் பொன்னுத்தாயின் தன்னிலை இருப்பினை வெளிப்படுத்துகிறார்.

**அன்னம்மா டீச்சர் சில நினைவுக் குறிப்புகள்**

**பால் சக்காரியாவின் 'அன்னம்மா டீச்சர் சில நினைவுக் குறிப்புகள்'** எனும் இக்கதையில் வரும் அன்னம்மா தன் குடும்பத்தின் சுமையினைத் தனி ஒருவராய்த் தாங்கும் கதாப்பாத்திரமாகத் தனது 33 வது வயது வரை வாழ்கிறார். தனக்கென்றுத் தனி வாழ்வினை அமைக்க விரும்பினாலும் தனது குடும்ப நிலையின் காரணமாகத் தனது ஆசைகளைத் துறந்து வாழ்கிறாள்.

வாழ்வனைத்தும் தனது சம்பளத்தினால் அவளது பெற்றோருக்கும் ஆதரவாக வழிநடத்தி வருவதனை

"ஆண்கள் உயர்ந்த வரதட்சணைக்காக விலைபேசிய போது குடும்பத்தின் வளமைக்கு முக்கியமான ஒரு உதாரணமாக அன்னம்மாவுடைய அப்பா மூன்று முறையும் ஹைஸ்கூல் டீச்சரான தன்னுடைய மூத்த மகளைக் தான் சுட்டிக் காட்டினார். இந்த வரதட்சணைப் பணத்தை வட்டிக்கு விட்டுத்தீர்ந்தபோது இளைய பெண்களின் சீதனங்களின் வளர்ச்சிக்கும், பீஸ் தொகை கட்டுவதற்குமெல்லாம் அன்னம்மாவின் சம்பளம் மிகவும் உபயோகமாக இருந்தது."[11](ப.114) என்னும் வரிகளில் அன்னம்மாவின் தன்னிலை இருத்தலை காட்சிப்படுத்துகிறார். இருத்தலியம் மனிதனைச் சுயச்சார்புடையவனாகச் சித்தரிக்கின்றது.

**முடிவுரை**

மனித வாழ்க்கையின் அவலங்களான சாவு,வேதனை அடுக்கடுக்காக நிகழும் போது அதனை எதிர்கொள்ள இயலாத நிலையையும், வாழ்வில் வெறுமையை உணர்வதனை ஒட்டகம், மகாத்தியாகம் கதைகளில் வாழ்வு ஒன்றுமில்லை எனும் அபத்தத்தையும், பெண்ணாகப் பிறந்தவள் ஆணின் துணையின்றி வாழ இயலாது எனும் சமூகக் கட்டுப்பாட்டை மீறி தன்னை முன்னிறுத்தி வாழும் பெண்ணின் இருப்பு என்னும் இருத்தலியல் தத்துவத்தினை இக்கட்டுரையில் ஆராயப்பெற்றுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

[1] முனைவர் செ.ரவிசங்கர், புதுமை இலக்கியப் பெட்டகம்,ப,9,.

[2] முனைவர் பா.ஆனந்தக்குமார், இந்திய ஒப்பிலக்கியம் (சூசன் பாசுனெட்டை முன்வைத்து), ப,44,.

[3] அரங்க சுப்பையா, இலக்கியத்திறனாய்வு இசங்கள் கொள்கைகள்,ப,302,.

[4] சா.கந்தசாமி (தொ.ஆ),க.நா.சுப்ரமணியனின் தேர்ந்தெடுத்த சிறுகதைகள்,ப,80,.

[5] மேலது,…….,ப,81,.

[6] மேலது,…….,ப,84,.

[7] மேலது,……,ப,86,.

[8] எஸ்.குப்தன்நாயர் (தொ.ஆ),மலையாள சிறுகதைகள்,ப,74,.

[9] மேலது,……,ப,78,.

[10] முனைவர் இரா.பிரேமா,பெண்மையச் சிறுகதைகள்,ப,118,.

[11] பால் சக்காரியா, சக்காரியாவின் கதைகள்,ப,114,.